# பாடத்திட்டம்

# தமிழ்

# அரசகரும மொழிகள் தேர்ச்சி

# தொகுதி- 3

அரசகரும மொழிகள் திணைக்களம்

**அரசகரும மொழிகள் தேர்ச்சி தொகுதி – பாடப் பரப்பு 3 - தமிழ்**

அறிமுகம்

அரசகரும மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்காக 7/2007 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் அனைத்து அரச உத்தியோகத்தர்களும் அவர்கள் அரச சேவையில் இணைந்து கொண்ட அரசகரும மொழிக்கு மேலதிகமாக உள்ள ஏனைய அரசகரும மொழியில் தேர்ச்சியடைய வேண்டும். அதற்கமைய சிங்கள மொழியினால் அரச சேவையில் இணைந்து கொண்ட உத்தியோகத்தர்களால் சித்தியடைய வேண்டிய அரசகரும மொழித் தேர்ச்சியின் 3 வது தொகுதியின் **தமிழ்** பாடத்திட்டத்தின் உள்ளடக்கம் இதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசகரும மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்காக அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட கல்வியியலாளர் குழுவினால் முன்வைக்கப்பட்ட நோக்கங்கள் மற்றும் உள்ளடக்கங்களை மீறாமல் அதற்கமைய இப் பாடத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. அவ்வாறே இரண்டாம் மொழியாகத் தமிழ் மொழியைக் கற்கும் போது நீங்கள் கையகப்படுத்த வேண்டிய அறிவு, ஆற்றல் மற்றும் மனப்பான்மை என்பவை இப் பாடத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இரண்டாம் மொழியைக் கற்றல் மற்றும் கற்பிக்கும் வழிமுறைகள் மற்றும் கற்கை நெறியின் மதிப்பீடு வழிமுறைகள் இப் பாடத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

பாடத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும் பாடப் புத்தகம் கற்கைநெறியைச் செயற்படுத்துவதற்கு வழிகாட்டலாக இருக்கும். கற்கைநெறியின் கற்றல் மற்றும் கற்பிக்கும் செயற்பாடுகளை அதன்படி ஒழுங்கமைத்துக்கொள்ள வேண்டும். அதற்காக இரண்டாம் மொழியினைக் கற்பித்தலுக்கு உரிய பயிற்சியைப் பெற்ற வளவாளர்களை வழங்குவது பயிலுனர்களுக்கு மிக அவசியமாகும். முக்கியமாகத் தமிழ் மொழியில் உச்சரிப்பு மாறும் போது கருத்து மாறுபடும். ஆதலால் நூலில் கூறப்பட்டுள்ள **தராதர மொழி உச்சரிப்புக்களை உச்சரிக்கக்கூடியவர்களாக ஆசிரியர்கள் இருத்தல் வேண்டும் என்பது முக்கியமான குறிப்பாகும்.**

**நோக்கம்**

1. தனியார் மற்றும் அலுவலக கடமைகளின்போது எளிமையான கலந்துரையாடல்களில் ஈடுபடுவதற்காக கேட்டல் மற்றும் பேச்சுத் திறனை மேம்படுத்தல்.
2. தனியார் மற்றும் அலுவலக கடமைகளின்போது வாசிப்பதற்கு வாசிப்புத் திறனை மேம்படுத்தல்.
3. குறுகிய ஆவணங்களை எழுதுவதற்கு எழுத்துத் திறனை மேம்படுத்தல்.
4. அறிவித்தல்களை வாசித்து விளங்கும் திறனை மேம்படுத்துதல் மற்றும் விண்ணப்பப்படிவங்களை நிரப்புதல், கடிதம் எழுதும் திறனை வளர்த்தல்.
5. பேச்சுத்தமிழையும், எழுத்துத்தமிழையும் வேறுபடுத்திக் காணும் ஆற்றலைப் பெறுதல்.

**அரசகரும மொழிகள் தேர்ச்சித் தொகுதி – பாடப் பரப்பு 3 - தமிழ்**

**கற்றல் மற்றும் கற்பிக்கும் வழிமுறைகள்**

இரண்டாம் மொழியினைக் கற்பிக்கும் போது விசேடமான கற்றல் மற்றும் கற்பிக்கும் வழிமுறைகள் பயன்படுத்தப்படுகின்றன. அவ்வாறான விசேட வழிமுறைகளைப் பயன்படுத்தி பயிலுநர்களுக்கு இரண்டாம் மொழியாக சிங்கள மொழியினைக் கற்பிப்பது பயனுள்ளதாக இருக்கும். கற்கைநெறியினைப் பயிலுவோருக்கு இப் பாடத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பாட உள்ளடக்கங்களை வழங்கும்போது பயன்படுத்தகூடிய வழிமுறைகள் மற்றும் கற்பிக்கும் உத்திகள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளன.

1. நேரடி முறைகள் (Direct method)
2. இலக்கண மொழிபெயர்ப்பு முறை (Grammar translation method)
3. பிரயோக முறை (Applied method)
4. இருமொழி முறை (Bilingual method)
5. எழுத்து வடிவ ஒற்றுமை முறை (Shape similarity method)
6. ஒலிப்பு முறை (Phonetic method)
7. ஒலியுடன் கூடிய மொழி முறை (Audio lingual method)
8. தேர்ந்தெடுக்கப்பட்ட முறைமை/ பன்முக முறை (Eclectic method)
9. புலனுணர்வு சார்ந்த / அறிவாற்றல் (Cognitive method)

10. சூழ்நிலை முறை (Situational method)
11. இயற்கை முறை (Natural method)
12. விகடம் நினைவாற்றல் முறை (Mimicry memorization method)

**அரசகரும மொழிகள் தேர்ச்சித் தொகுதி - பாடப் பரப்பு 3 - தமிழ்**

**மதிப்பீடு மற்றும் மதிப்பீட்டுச் செயற்பாடு**

அரசகரும மொழித் தேர்ச்சியைப் பெறுவதற்கு தொகுதி 3 ஆக தயாரிக்கப்பட்ட பாடத்திட்டதைச் செயற்படுத்துவதற்கு 150 மணித்தியாலங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. பாடத்திட்டதிற்கு அமைவாக அரசகரும மொழி திணைக்களத்தினால் நடாத்தப்படும் கற்கைநெறியின்போது மதிப்பீட்டுச் செயற்பாடு இரண்டு வகையாக நடைபெறும்.

1. கற்கைநெறியின் இடையில் நடைபெறும் மதிப்பீடு.
2. கற்கைநெறியின் இறுதியில் நடைபெறும் மதிப்பீடு.

**1. கற்கைநெறியின் இடையில் நடைபெறும் மதிப்பீடு.**

இங்கு கற்கைநெறியினைப் பயிலுவோர் கற்கைநெறியின் இடையில் அடிக்கடி மதிப்பீடுகளுக்கு உட்படுத்தப்படுவார்கள். தாயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுச் சாதனங்களை உபயோகித்து நடாத்தப்படும் மதிப்பீட்டுச் செயற்பாடு குறைந்தது 25 மணித்தியாலங்களுக்கு ஒரு முறையாவது நடாத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. முன்மாதிரி மதிப்பீட்டுச் சாதனங்கள் அரசகரும மொழிகள் திணைக்களத்தினால் வழங்கப்படும். இதைத் தவிர கற்றல் மற்றும் கற்பிக்கும் செயற்பாட்டின் இடையில் ஆலோசகரினால் கற்கைநெறியினைப் பயிலுவோர் மதிப்பிடப்படுவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தொடர்ச்சியாக மதிப்பீட்டுச் செயற்பாட்டினால் எதிர்பார்ப்பது கற்கைநெறியினைப் பயிலுவோரின் உத்தேச கற்றல் பெறுபேற்றைப் பெற்றுள்ள மட்டங்களை அறிந்து கொள்ளுவதற்கும் அதற்கமைய அடுத்துவரும் கற்றல் செயற்பாடுகளை ஒழுங்கமைப்பதற்குமான வாய்ப்புகளை வழங்குவதற்காகும். உத்தேச கற்றல் பெறுபேறுகளைப் பெற்றிடாத கற்கைநெறி பயிலுவோரின் உத்தேச கற்றல்

பெறுபேற்றை பெற்றுகொள்ளுவதற்காக தகுந்த நடவடிக்கைகள் ஆலோசகர்களிடம் இருந்து எதிர்பார்க்கப்படுகிறது. உத்தேசக் கற்றல் பெறுபெறுகளை இனங்காண்பதற்கு பாடத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கற்றல் பெறுபெறுகள் வழிகாட்டலாக இருக்கும்.

2. **கற்கைநெறியின் முடிவில் நடைபெறும் மதிப்பீடு**.

இம் மதிப்பீட்டுச் செயற்பாடு இரண்டு கட்டங்களாக நடைபெறும்.

| | | |
|---|---|---|
| **எழுத்துப் பரீட்சை** | **மதிப்பெண்கள் 40%** | **(நேரம் 03 மணித்தியாலம்)** |
| **செயன்முறைப் பரீட்சை (வாய்மூல)** | **மதிப்பெண்கள் 60%** | **(நேரம் 30 நிமிடம்)** |

**எழுத்துப் பரீட்சை இலங்கை பரீட்சை திணைக்களத்தினாலும் செயன்முறை பரீட்சை (வாய்மொழி) அரசகரும மொழிகள் திணைக்களத்தினாலும் நடாத்தப்படும். அரசகரும மொழி தேர்ச்சியில் சித்தியடைவதற்கு எழுத்துப் பரீட்சை மற்றும் வாய்மூலப் பரீட்சை இரண்டிலும் சித்தியடைவது அவசியமாகும்.** எழுத்து மற்றும் வாய்மொழி பரீட்சைகளுக்காக பாடத்திட்டத்தில் குறிப்பிட்டுள்ள கற்றல் பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீடு கூற்றுகள் தயாரிக்கப்படும். முன் மாதிரி எழுத்து மற்றும் பரீட்சை சாதனங்கள் மற்றும் மதிப்பீடு பெறுபேறுகள் கூற்றுக்கள் அரசகரும மொழிகள் திணைக்களத்தினால் வழங்கப்படும்.

**அரகரும மொழிகள் தேர்ச்சித் தொகுதி - பாடப் பரப்பு 3 - தமிழ்**

| அலகு | நோக்கம் | உள்ளடக்கம் | உத்தேச கற்றல் பெறுபெறுகள் | கற்றல் மற்றும் கற்பிக்கும் வழிமுறை | நேரம் (மணித்தியாலம்) |
|---|---|---|---|---|---|
| 1 | 1.1 உரையாடல்களுக்கச் செவிமடுத்து கருத்துக்களைத் தெரிவிப்பார்.<br><br>1.2 ரை, இன்ரை, இலை வேற்றுமை உருபுகளை அறிவார்.<br><br>1.3 ஏவல்வினைகளைப் பயன்படுத்திக் கதைக்கப் பழகுவர்.<br><br>1.4 நிகழ்கால வினைகளை உருவாக்கப் பழகுவர்.<br><br>1.5 ட, ப, ம, ச, த, அ எழுத்துக்களை எழுதி சொற்களை ஆக்கப் பழகுவார். | தாதிக்கும் ஆசிரியருக்கும் இடையில் உரையாடல்<br><br>ரை, இன்ரை வேற்றுமை உருபை வைத்துக் கதைத்தல்.<br><br>ஏவல் வினை ஏவல் வினையைப் பாவித்துக் கதைத்தல்.<br><br>நிகழ்காலம் மற்றும் இலை வேற்றுமைகளை வைத்துக் கதைத்தல்.<br><br>ட, ப, ம, ச, க, த அ எழுத்துக்களை எழுதுவர் | தாதிக்கும் ஆசிரியருக்கும் இடையில் உரையாடல்<br><br>ரை, இன்ரை வேற்றுமை உருபைப் பயன்படுத்துவர்.<br><br>ஏவல்வினைச் சொற்களைப் பயன்படுத்துவர்.<br><br>நிகழ்கால சொற்களைப் பாவிப்பர். இலை வேற்றுமை உருபைப் பயன்படுத்துவர்.<br><br>ட, ப, ம, ச, க, த, அ எழுத்துக்களை எழுதப் பழகுவர். | • எடுத்துகாட்டல்<br>• பின்பற்றல்<br>• பாத்திர நடிப்பு<br>• இருமொழி முறை | 10 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2 | 2.1 வைத்தியசாலையில் கலந்துரையாடலை பழகுவார்.<br><br>2.2 க்கு, அக்கு, உக்கு வேற்றுமை உருபுகளை வைத்துக் கதைக்கப் பழகுவார்.<br><br>2.3 0-10 வரை இலக்கங்களைப் பழகுவார்.<br><br>2.4 எழுத்துக்களை எழுதப் பழகுவார். | வைத்தியர், நோயாளி கலந்துரையாடல்<br><br>க்கு, உக்கு, அக்கு வேற்றுமை உருபைப் பழகுதல்.<br><br>இலக்கம் 0-10 வரை ஆய் இருக்கு<br><br>ய, ர, ழ, வ, ள, ல, ஆ | வைத்தியர், நோயாளிக்கு இடையில் கலந்துரையாடப் பழகுவர்.<br><br>ஆய், இருக்கு சொற்களை வைத்துப் பேசப்பழகுவர்.<br><br>க்கு, உக்கு, அக்கு வேற்றுமை உருபைப் பழகுதல்.<br><br>இலக்கம் 0-10 வரை பேசப்பழகுவர்.<br><br>ய, ர, ழ, வ, ள, ல ஆ எழுத்துக்களை எழுதப் பழகுவர். | • எடுத்துகாட்டல்<br>• பின்பற்றல்<br>• பாத்திர நடிப்பு<br>• இருமொழி முறை | 12 |
| 3 | 3.1 இயக்கத் திறனை வெளிப்படுத்தும் வகையில் எழுத்துடைய சொற்களை எழுதுவார்.<br><br>3.2 உறுப்பெழுத்துக்கள் உடைய சொற்களை எழுதுவார். | தமிழ் எழுத்துக்கள் எழுதுதல்<br><br>உறுப்பெழுத்துக்கள் உடைய சொற்கள் எழுதுதல் மற்றும் வாசித்தல். | எழுத்துறுப்புக்களுடைய எழுத்துக்களைச் சரியாக எழுதுவார்<br><br>சொற்கள் எழுதுவார்<br><br>சொற்களை வாசிப்பார் வழியைக் கேட்டு அறிந்து கொள்வர்.<br><br>இல்லையெண்டால்<br>- ஏக்கை<br>- உம் பொழுது சொற்களை | • வினா வினவுதல்<br>• எடுத்துகாட்டல்<br>• எழுத்து வடிவ ஒற்றுமை முறை<br>• ஒலிப்பு முறை<br>• இருமொழி முறை<br>• பயிற்சி முறை | 10 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 3.3 வழியைக் கேட்டு அறியும் திறனைப் பெறுவார்.<br><br>3.4 ஏக்கை, உம் இடைநிலை உருபுகளை வைத்து கதைக்கப் பழகுவர்.<br><br>3.5 இலக்கங்களை பேசப்பழகுவர்.<br><br>3.6 எழுத்துக்களை எழுதப் பழகுவார் | வழியைக் கேட்டு அறிந்து கொள்ளல்.<br><br>இல்லையெண்டால்<br>- ஏக்கை<br>- உம் பொழுது சொற்களை வைத்து பேசப் பழகுதல்.<br><br>11-20 இலக்கம் எழுதுதல்.<br><br>ங, ஞ, ண, ந, ம, ன, இ | வைத்து பேசப் பழகுவர்.<br><br>11-20 இலக்கம் பேசப்பழகுவர்.<br><br>ங, ஞ, ண, ந, ம, ன, இ எழுத்துக்களை எழுதி உச்சரிக்கப் பழகுவர். | | |
| 4 | 4.1 சாப்பாட்டுக் கடையில் கலந்துரையாடப் பழகுவர்.<br>4.2 21-30 வரை இலக்கங்களைப் பழகுவார்.<br>4.3 வேணும், வேண்டாம் போன்ற சொற்களைப் பழகுவர். | சாப்பாட்டுக் கடையில் கலந்துரையாடல்.<br><br>21-30 வரை இலக்கங்களை அறிதல்.<br>வேணும், வேண்டாம் போதும், போதாது, வேணுமா?, போதுமா? | சாப்பாட்டுக் கடையில் கலந்துரையாடலில் ஈடுபடுவர்.<br><br>21-30 வரை இலக்கங்களை அறிந்து கொள்வர்.<br>வேணும், வேண்டாம் போதும், போதாது, வேணுமா?, போதுமா? காணுமா? சொற்களை வைத்து வாக்கியங்கள் அமைக்கப் பழகுவர். | • பாத்திர நடிப்பு<br>• பின்பற்றல்<br>• இருமொழி முறை<br>• விளையாட்டு முறை | 16 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 4.4 எழுத்துக்களை எழுதப் பழகுவார். | ஈ எழுத்தில் உயிர்மெய் எழுத்துக்களை எழுதக் கற்றுக் கொள்ளல். | ஈ எழுத்தின் உயிர்மெய் எழுத்துக்களை எழுதி உச்சரிக்கக் கற்றுக் கொள்வர். | | |
| 5 | 5.1 தொலைபேசி உரையாடல்<br><br>5.2 வேற்றுமை உருபுடைய பெயர் சொற்களை உரையாடல்களின் போது பயன்படுத்துவார்.<br><br>5.3 நேரம் அறிதல்.<br><br>5.4 கிழமை நாட்கள்.<br><br>5.5 வினை எச்சத்துடன் -லாம் சேர்த்தல்.<br><br>5.6 31-40 வரை இலக்கம்<br><br>5.7 'உ' எழுத்து | தொலைபேசி உரையாடல்<br><br>ஓடை வேற்றுமை உருபு கொண்ட பெயர் சொற்களை எழுதுதல்.<br><br>நேரம் அறிதல்.<br><br>கிழமை நாட்களை அறிதல்.<br><br>வினை எச்சத்துடன் -லாம் சேர்த்தல்.<br><br>31-40 வரை இலக்கம் அறிதல்.<br><br>'உ' எழுத்தின் உயிர்மெய் ஒலிகளை அறிதல். | தொலைபேசி உரையாடலை அறிவார்.<br><br>ஓடை உருபு கொண்ட பெயர் சொற்களை பயன்படுத்தி வாக்கியங்களை கூறுவர்<br><br>நேரத்தைக் கூறக் கற்றுக் கொள்வர்.<br><br>கிழமை நாட்களை அறிதல்.<br><br>வினை எச்சத்துடன் -லாம் சேர்த்து கதைக்கப் பழகுவர்.<br><br>31-40 வரை இலக்கங்களை கற்றுக் கொள்வர்.<br><br>'உ' எழுத்தின் உயிர்மெய் ஒலிகளை அறிவர். | • எடுத்துகாட்டல்<br>• பின்பற்றல்<br>• பாத்திர நடிப்பு<br>• செயல்முறை செயற்பாடு<br>• எழுத்து வடிவ ஒற்றுமைமுறை<br>• ஒலிப்பு முறை | 12 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 6 | 6.1 பொலிஸ் நிலையத்தில் கலந்துரையாடல்.<br>6.2 ஐ வேற்றுமை உருபை வைத்துக் கதைக்கப் பழகுவார்.<br>6.3 ஊ எழுத்தின் உயிர் மெய் எழுத்துக்கள் மற்றும் 'ஆ' உயிரின் மாற்றொலிகள் ஆகியவற்றை சரியாக உச்சரிப்பர். | பொலிஸ் நிலையத்தில் கலந்துரையாடல்.<br><br>'ஆ' எழுத்தின் மாற்றொலிகளை அறிதல்.<br><br>எங்கையோ சொல்லை வைத்து கதைக்கப் பழகுவர்.<br><br>ஐ வேற்றுமை உருபை வைத்து கதைக்கப் பழகுதல்.<br><br>கேள்விச் சொற்களை அறிதல்.<br><br>10-100 வரை இலக்கங்களை அறிதல்.<br><br>-உடன என்ற சொல்லை வைத்து கதைக்கப் பழகுதல்.<br><br>'ஊ' எழுத்தின் உயிர்மெய் எழுத்துக்களை அறிதல். | பொலிஸ் நிலையத்தில் கலந்துரையாடுவர்.<br><br>'ஆ' எழுத்தின் மாற்றொலிகளை அறிதல்.<br><br>எங்கையோ சொல்லை வைத்து கதைக்கப் பழகுவர்.<br><br>கேள்விச் சொற்களை அறிவர்.<br><br>10-100 வரை இலக்கங்களை அறிந்து கொள்வர்.<br><br>-உடன என்ற சொல்லை வைத்து கதைக்கப் பழகுவர்.<br><br>'ஊ' எழுத்தின் உயிர்மெய் எழுத்துக்களை அறிவர். | • வினா வினவுதல்<br>• பின்பற்றல்<br>• பாத்திர நடிப்பு | 12 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 7 | 7.1 புடைவைக் கடையில் உரையாடல்.<br>7.2 ரை, இன்ரை வேற்றுமை உருபு.<br>7.3 கேள்விச் சொற்களை அறிவார்.<br>7.4 நிகழ்காலத்தை அறிவர்.<br>7.5 பெயரெச்சத்தை அறிவர்.<br>7.6 எ, ஏ, ஐ எழுத்துக்களின் உயிர்மெய் எழுத்துக்கள்<br>7.7 அளவிலை என்ற சொல்லை வைத்து கதைத்தல்.<br>7.8 எ, ஏ எழுத்துக்களின் மாற்றொலிகளை அறிவர். | புடைவைக் கடையில் உரையாடலை அறிதல்.<br><br>அளவிலை என்ற சொல்லை வைத்து கதைக்கப் பழகுதல்.<br><br>எ, ஏ எழுத்துக்களின் ஒலிகளை அறிதல்.<br><br>உயிர்மெய் எழுத்துக்களை எழுதப் பழகுதல்.<br><br>கேள்விச் சொற்களை வைத்து கதைக்கப் பழகுதல்.<br><br>நிகழ்காலத்தை அறிதல்.<br><br>பெயரெச்சத்தை அறிவர்.<br><br>நேரத்தை அறிவர்.<br><br>ரை, இன்ரை வேற்றுமை உருபை அறிதல். | புடைவைக் கடையில் உரையாடலை அறிந்து கொள்வர்.<br><br>அளவிலை என்ற சொல்லை வைத்து கதைக்கப் பழகுவர்.<br><br>எ, ஏ எழுத்துக்களின் மாற்றொலிகளை அறிவர்.<br>கேள்விச் சொற்களைப் பயன்படுத்தி கதைக்கப் பழகுவர்.<br><br>நிகழ்காலத்தை அறிந்து கொள்வர்.<br><br>பெயரெச்சங்களை வைத்துக் கதைக்கப் பழகுவர்.<br><br>நேரத்தை அறிந்து கொள்வர்.<br><br>ரை, இன்ரை வேற்றுமை உருபை வைத்துக் கதைக்கப் பழகுவர். | • வினா வினவுதல்<br>• எடுத்துகாட்டல்<br>• பின்பற்றல்<br>• பாத்திர நடிப்பு<br>• எழுத்து வடிவ ஒற்றும முறை<br>• ஒலிப்பு முறை<br>• பயிற்சி முறை | 12 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 8 | 8.1 பேருந்தில் கலந்துரையாடல் முறையை அறிவர்.<br><br>8.2 இறந்த காலத்தை அறிவர்.<br><br>8.3 ஒ, ஓ, ஔ உயிர்மெய் எழுத்துக்களை எழுதுவார். | பேருந்தில் ஏற்படும் கலந்துரையாடலை அறிதல்.<br><br>இறந்தகால இடைநிலைகளை -ச்ச்-, -ட்ட்-, -இன்-, -ந்த்- வைத்து கதைக்கப்பழகுதல்.<br><br>ஒ, ஓ, ஔ உயிர்மெய் எழுத்துக்களை அறிதல். | பேருந்தில் கலந்துரையாடலை அறிவர்.<br><br>இறந்தகால இடைநிலைகளை -ச்ச்-, -ட்ட்-, -இன்-, -ந்த்- வைத்து கதைக்கப்பழகுவர்.<br><br>ஒ, ஓ, ஔ உயிர்மெய் எழுத்துக்களை எழுதி உயிர்மெய் ஒலிகளை வைத்துக் கதைக்கப் பழகுவர். | • வினா வினவுதல்<br>• பின்பற்றல்<br>• பாத்திர நடிப்பு<br>• குழு முறை | 12 |
| 9 | 9.1 மரண வீட்டைப் பற்றிய உரையாடலை அறிவர்.<br><br>9.2 இலை, ட்டை, அட்டை, இட்டை, ஆலை வேற்றுமை உருபுகளை அறிவார்.<br><br>9.3 இறந்தகால இடைநிலைகளான -ன்-, -த்த்-, -ன்ன்-, -ண்ட்-, -ட்- ஆகியவற்றை அறிவார். | மரண வீட்டைப் பற்றிய உரையாடலை அறிதல்.<br><br>இலை, ட்டை, அட்டை, இட்டை, ஆலை வேற்றுமை உருபுகளை வைத்துக் கதைக்கப் பழகுதல்.<br><br>இறந்தகால இடைநிலைகளான -ன்-, -த்த்-, -ன்ன்-, -ண்ட், -ட்- ஆகியவற்றை வைத்து கதைக்கப் பழகுதல். | மரண வீட்டைப் பற்றிய உரையாடலை அறிவார்.<br><br>இலை, ட்டை, அட்டை, இட்டை, ஆலை வேற்றுமை உருபுகளை வைத்துக் கதைக்கப் பழகுவார்.<br><br>இறந்தகால இடைநிலைகளான -ன்-, -த்த்-, -ன்ன்-, -ண்ட்-, -ட்- ஆகியவற்றைப் பயன்படுத்திக் கதைக்கப் பழகுவர்.<br><br>1000 வரை இலக்கங்களைப் பழகுவார். வடமொழி எழுத்துக்களை அறிவார். | • வினா வினவுதல்<br>• எடுத்துகாட்டல்<br>• பின்பற்றல்<br>• பாத்திர நடிப்பு<br>• குழு முறை | 20 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 9.4 1000 வரை இலக்கங்களைப் பழகுவார். வடமொழி எழுத்துக்களை அறிவார்.<br><br>9.5 ‘உ’ எழுத்தின் மாற்றொலிகளை அறிவார். | 1000 வரை இலக்கங்களைப் பழகுதல். வடமொழி எழுத்துக்களை அறிவார்.<br><br>‘உ’ எழுத்தின் மாற்றொலிகளை அறிதல். | ‘உ’ எழுத்தின் மாற்றொலிகளை அறிவார். | | |
| 10 | 10.1 பேச்சுத்தமிழ் எழுத்துத் தமிழாக மாறும் விதத்தை அறிவார்.<br>10.2 (ரை, இன்ரை) - (இன், உடைய, அது)<br>10.3 (இலை - இல், இலே)<br>10.4 (க்கு, உக்கு, அக்கு) மாறும்விதத்தை அறிவார்.<br><br>10.5 இலக்கம் 1-20 பேச்சு. எழுத்தாக மாறுதலை அறிவார்.<br>10.6 ச,த,க ற் மாற்றொலிகளை அறிவார். | பேச்சுத்தமிழ் எழுத்துத் தமிழாக மாறும் விதத்தை அறிதல்.<br><br>(ரை, இன்ரை) - (இன், உடைய, அது)<br><br>(இலை - இல், இலே)<br>(க்கு, உக்கு, அக்கு) மாறும்விதத்தை அறிதல்<br><br>இலக்கம் 1-20 பேச்சு. எழுத்தாக மாறுதலை அறிதல்.<br><br>ச,த,க ற மாற்றொலிகளை அறிதல். | பேச்சுத்தமிழ் எழுத்துத் தமிழாக மாறும் விதத்தை அறிவார்.<br><br>(ரை, இன்ரை) - (இன், உடைய, அது)<br><br>(இலை - இல், இலே)<br>(க்கு, உக்கு, அக்கு) மாறும்விதத்தை அறிவார்.<br><br>இலக்கம் 1-20 பேச்சு. எழுத்தாக மாறுதலை அறிதல்.<br><br>ச,த,க ற் மாற்றொலிகளை அறிவார். | • வினா வினவுதல்<br>• எடுத்துகாட்டல்<br>• பின்பற்றல்<br>• பாத்திர நடிப்பு<br>• எழுத்து வடிவ ஒற்றுமை முறை<br>• ஒலிப்பு முறை<br>• குழு முறை | 12 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 11 | 11.1 பல் வைத்தியருக்கும் நோயாளிக்கும் இடையில் நடந்த உரையாடலை அறிவார்.<br>11.2 ப, ட, ற எழுத்துக்களின் மாற்றொலிகளை அறிவார்.<br>11.3 இலக்கம் 11 - 100 வரை பேச்சு எழுத்து மாறும் விதத்தை அறிவார்.<br>11.4 தன்மை, முன்னிலை, படர்க்கை காட்டும் பின்னொட்டுக்களை அறிவார்.<br>11.5 ஓடை - ஓடு, உடன் வேற்றுமை உருபுகளை அறிவார். | பல்வைத்தியருக்கும் நோயாளிக்கும் இடையில் நடந்த உரையாடலை அறிதல்.<br>ப, ட, ற எழுத்துக்களின் மாற்றொலிகளை அறிதல்.<br>இலக்கம் 11 - 100 வரை பேச்சு எழுத்து மாறும் விதத்தை அறிதல்.<br>தன்மை, முன்னிலை, படர்க்கை காட்டும் பின்னொட்டுக்களை அறிதல்.<br>ஓடை, ஓடு, உடன் வேற்றுமை உருபுகளை அறிதல்.<br>கேள்விச் சொற்களை அறிதல் | பல்வைத்தியருக்கும் நோயாளிக்கும் இடையில் நடந்த உரையாடலை அறிவார்.<br>ப, ட, ற எழுத்துக்களின் மாற்றொலிகளை அறிவார்.<br>இலக்கம் 11 - 100 வரை பேச்சு எழுத்து மாறும் விதத்தை அறிவார்.<br>தன்மை, முன்னிலை, படர்க்கை காட்டும் பின்னொட்டுக்களை அறிவார்.<br>ஓடை, ஓடு, உடன் வேற்றுமை உருபுகளை அறிவார்.<br>கேள்விச் சொற்களை அறிவார். | • வினா வினவுதல்<br>• எடுத்துகாட்டல்<br>• பின்பற்றல்<br>• பாத்திர நடிப்பு | 12 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 12 | 12.1 பேச்சு எழுத்தாக மாறும் விதத்தை அறிதல்.<br><br>12.2 எதிர்கால -வ்-, -ப்ப்- இடைநிலைகளை அறிவார்.<br><br>12.3 வேற்றுமை உருபுகள் எழுத்துத் தமிழாக மாறும் விதத்தை அறிவார்.<br><br>12.4 ஒருமை பன்மைகளை அறிவார்.<br>12.5 திசைகளை அறிவார்.<br><br>12.6 மேலை - மேல் கீழை - கீழ் போன்ற சொற்களை எழுத்துத் தமிழில் அறிவார்.<br><br>12.7மாதங்கள், கிழமை நாட்கள், நேரம் ஆகியவற்றை அறிவார். | பேச்சு எழுத்தாக மாறும் விதத்தை அறிதல்.<br><br>எதிர்கால இடைநி லைகளை -வ்-, -ப்ப்- எழுத்துத்தமிழில் மாறும் விதத்தை அறிவார்.<br><br>வேற்றுமை உருபுகள் எழுத்துத் தமிழில் மாறும் விதத்தை அறிதல்.<br><br>ஒருமை பன்மை வாக்கியங்களை அறிதல்.<br>திசைகளை அறிதல்.<br><br>மேலை - மேல் கீழை - கீழ்/கீழே போன்ற சொற்களை எழுத்துத்தமிழில் அறிதல்.<br><br>மாதங்கள், கிழமை நாட்கள், நேரத்தை அறிதல். | பேச்சு எழுத்தாக மாறும் விதத்தை அறிவார்.<br><br>எதிர்கால இடைநிலைகளை -வ்-, -ப்ப்- ஆகியவற்றை வைத்து எழுத்துத்தமிழில் வாக்கியம் அமைத்துப் பழகுவார்.<br>வேற்றுமை உருபுகள் எழுத்துத் தமிழில் மாறும் விதத்தை அறிவார்.<br><br>ஒருமை பன்மை வாக்கியங்களை அறிவார்.<br>திசைகளை அறிவார்.<br><br>மேலை - மேல் கீழை - கீழ்/கீழே போன்ற விதத்தில் எழுத்துத்தமிழில் மாற்றிப் பழகுவர்.<br><br>மாதங்கள், கிழமை நாட்கள், நேரத்தை அறிவார். | • வினா வினவுதல்<br>• எடுத்துகாட்டல்<br>• பின்பற்றல்<br>• பயிற்சி முறை | 06 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 13 | 13.1 -ஆவது, என்றாலும்- -விட-, போல், பற்றி, என்று ஆகிய சொற்களை அறிவார்.<br>13.2 கடிதம் எழுதப் பழகுவார்.<br>சுயவிபரப் படிவம் நிரப்புவார்.<br><br>13.3அறிவுறுத்தல்களை அறிவார்.<br><br>13.4 சரீர அவயவயங்கள், நோய்களை அறிவார். | -ஆவது, என்றாலும்- -விட-, போல், பற்றி, என்று ஆகிய சொற்களை அறிதல்.<br><br>கடிதம் எழுதப் பழகுதல்.<br>சுயவிபரப் படிவம் நிரப்பப் பழகுதல்.<br><br>அறிவுறுத்தல்களை அறிதல்.<br><br>சரீர அவயவயங்கள், நோய்களை அறிதல் | ஆவது, என்றாலும், விட, போல், பற்றி, என்று ஆகிய சொற்களை அறிவார்.<br><br>கடிதம் எழுதப் பழகுவார்.<br>சுயவிபரப் படிவம் நிரப்பப் பழகுவார்.<br><br>அறிவுறுத்தல்களை அறிவார்.<br><br>சரீர அவயவயங்கள், நோய்களை அறிவார். | • வினா வினவுதல்<br>• எடுத்துகாட்டல்<br>• பின்பற்றல்<br>• பயிற்சி முறை | 04 |
| | தொடர் மதிப்பீடு | | | | 08 |
| | மொத்தம் | | | | 150 |